முறையிலே மிக அழகாகச் செய்து வருகின்றார்கள். அந்த நோக்கத்தோடுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை அவர்களே எடுத்து அறிவித்தார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இந்த அரசு மக்களுக்கு ஏற்ப, எந்த அளவிற்குச் சாலைகள், பாலங்கள் வேண்டுமோ அதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு நிறைவேற்றும், பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பாலம் சம்பந்தமாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலம்தான்—அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

44—

கடமங்குடி—இடைக்கியம் கிராமங்களுக்குத் தனியே கிராம அங்காடி.

*19993—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி பாலையூர் ஊராட்சியைச் சேர்ந்த கடமங்குடி, இடைக்கியம் ஆகிய இரண்டு கிராமங்களையும் சேர்த்து தனியே கிராம அங்காடி புதிதாக திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

50—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தல்.

*22116—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி மாவட்டமாக இருப்பதால் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS